தெல்லுடைக்கும், மா அரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் பொலித்தீன், கேக், குளிர்பான தயாரிப்புக்களுக்கு
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கைக்கடிகாரம்! அழகுசாதன, அன்பளிப்பு எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்களுக்கு
நாடுங்கள்:
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

சுடர் 10 | திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 17 செவ்வாய்க்கிழமை (31 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 65

# பூநகரியில் உள்ள இராணுவ முகாமை ஒரே தடவையில் அகற்ற முடியாது

## அரசின் நிலைப்பாடு இது என்கிறார் பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன்

யாழ்ப்பாணம், ஜனவரி 31

பூநகரி சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்துக்குத் திறந்து விடுவதற்காக, பூநகரி இராணுவ முகாமை ஒரே தடவையில் அகற்ற முடியாது. இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இத்தகவலை யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகத்திடம் தெரிவித்துள்ளார்.

பூநகரி இராணுவ முகாமை படிப்படியாகவே அகற்ற முடியும் என்ற நிலையை அரசாங்கம் மாற்றப்போவதில்லை என்றும் ஹமில்டன் கூறியுள்ளார்.

இலங்கை வந்த பரிசுத்த பாப்பரசரின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் வகையில் கொழும்பு சென்றிருந்த யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை சந்தித்துப் பேசினார்.

பாப்பரசர் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் ஜெனரல் ஹமில்டனை சந்தித்த யாழ். ஆயர்-

அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் தேக்க நிலையில் இருப்பதற்குகாரணமாக இருக்கும் பூநகரி – சங்குப்பிட்டி பாதை விடயம் சம்பந்தமாக விவாதித்தார்.

குடாநாட்டு மக்கள் பாதுகாப்பாக வெளியிடங்களுக்கு செல்ல வசதியாக போக்குவரத்து பாதை ஒன்றைத் திறக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளதாகவும்—

பூநகரி பாதையை திறப்பது போக்குவரத்துக்கு உகந்தது என்றும்— யாழ். ஆயர் தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்த ஹமில்டன்—

பூநகரி முகாமை பல தியாகங்களை செய்து படையினர் கைப்பற்றினர் என்றும்—

அப்படியான முகாமை ஒரேயடியாக ஒரே நாளில் வாபஸ்பெற முடியாது என்றும்— தெரிவித்தாராம். (இ-3-4)

## இரணவில பகுதியில் இராணுவம் குவிப்பு!

### மக்கள் மத்தியில் பதற்றம்

கொழும்பு, ஜன. 31

சர்ச்சைக்குரிய அமெரிக்க வானொலி நிலையம் அமைக்கப்பட்டு வரும் இரணவில பகுதிக்கு அரசு பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரை அனுப்பியுள்ளதை அடுத்து அங்கு மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வானொலி நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்களால் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கொடிகள், ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் என்பனவற்றை படையினர் அப்புறப்படுத்தியதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பதற்றம் உருவாகியுள்ளது.

சில இடங்களில் படையினர் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனநாயக வழியிலான மக்களின் எதிர்ப்பை இராணுவத்தைக் கொண்டு அடக்கும் அரசின் செயலை தாம் கண்டிப்பதாக வண. பிதா ஒஸ்வால்ட் பேர்த் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டம் இரணவில பகுதியில் அமெரிக்க வானொலி நிலையம் அமைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் கடும் மழை!

கொழும்பு, ஜன. 31

மணலாறுப் பகுதியில் பெய்து வரும் பலத்த மழையினால் மூன்று கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

ஜனகபுர, ஹலம்பவெவ, நிக்கவெவ ஆகிய கிராமங்களே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள அணைக்கட்டு ஒன்று உடைத்ததை அடுத்து நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ஐ-6)

## கிளிநொச்சியிலும் மாவுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் கோதுமைமா உட்பட பலஅத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாத்தட்டுப்பாட்டை நீக்க ஆவன செய்ய வேண்டும் எனவும்—

போதியளவு மாவை ப.நோ. கூ சங்கங்கள்,இறக்குமதியாளர்கள் களஞ்சியப் படுத்திவைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தாண்டிக்குளம் சோதனை முகாமில் சோதனையிடுவதில் எதுவித தளர்வும் இல்லாததாலேயே கிளிநொச்சி ப. நோ. கூ. சங்க வாகனங்கள் வருவதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. (இ-5)

## வடக்கு-கிழக்கு பகுதியிலும் அரசின் வீடமைப்பு திட்டம்

### அமைச்சர் நிமால் தகவல்

மாவட்டங்கள் தோறும் இம்மாதம் முதல் அமுல் செய்யப்படவிருக்கும் நூறு வீடுகள் அமைக்கும் திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று வீடமைப்பு,நிர்மாணத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

முதற்கட்டமாக 15 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்படவுள்ள இடங்களை அந்த அந்த மாவட்ட வீடமைப்பு அதிகாரசபை தெரிவு செய்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-3)

## 'நரோமா' அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வராது

திருமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான ''நரோமா'' பயணிகள் கப்பல் சேவை முன்னர் அறிவிக்கப்பட்டபடி அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படமாட்டாது

இது குறித்து நேற்று மாலை கொழும்பில் இருந்து இங்கு அறிவிக்கப்பட்டது.

அடுத்த வாரம் தொடக்கம் இக் கப்பல் சேவை திருமலையில் இருந்து தீவுப்பகுதிக்கு மட்டும் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''நரோமா'' கப்பல் சேவை பருத்தித்துறை வரை எப்போது நடத்தப்படும் என்பது குறித்து விவரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. [ஐ-3]

## விருப்பு வாக்கெடுப்பு முறை நீக்கப்படும் என அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

விருப்புத் தெரிவு வாக்கெடுப்பு முறை அடுத்த தேர்தலின் போது நீக்கப்பட்டு விடுமென அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர். ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்த முறை எதிர்ப்பு உணர்வுகளையும் உட்கட்சிப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விருப்பத் தெரிவு வாக்கு முறை சாதி இன, பண அடிப்படையில் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இம்முறையின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் பென்சன்வவுச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 31

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம்மாதத்துக்கான [ஜனவரி] பென்சன் வவுச்சர்களும் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகளும் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-7)

## குண்டு வீச்சு அழிவின் நினைவுச் சின்னம்

### பாப்பரசருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

ஸ்ரீலங்கா படையினரின் குண்டு வீச்சுக்களினால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட அழிவுகளைச் சித்திரிக்கும் நினைவுச் சின்னம் ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு வழங்கப்பட்டது.

யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் அந்த நினைவுச் சின்னத்தை பாப்பரசரிடம் நேரடியாகக் கையளித்தார்.

பனை மரத்தில் வடிவமைக்கப்பட்ட அந்த நினைவுச் சின்னத்தில், ''சுப்ப சோனிக்'' குண்டு வீச்சினால் பாரிய சேதமடைந்த குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் காட்சியும் பொறிக்கப்பட்டுள்ளது.

பாப்பரசரின் உருவப்படத்துடன் கூடிய சுமார் 4 அடி உயரமான— அந்த நினைவுச் சின்னம் விசேடமாக யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டு கொழும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# 4 ஆம் கட்ட பேச்சு தாமதமடைய கருத்து வேற்றுமைகளே காரணம்

### பி. பி. ஸி. தரும் தகவல்

லண்டன், ஜன 31

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே பல விஷயங்கள் குறித்து எழுந்துள்ள கருத்து வேற்றுமைகளே நான்காவது சுட்டப் பேச்சு தாமதம் அடைவதற்குக் காரணம் என்று பி பி. ஸி. கருத்து வெளியிட்டுள்ளது.

சமாதான முயற்சிகளில் தடங்கல்கள், தாமதங்கள் ஏற்படக் கூடும் என்று வதந்திகள், ஊகங்கள் அடிபட்டபோதும்—

''ஜனாதிபதி சந்திரிகாவை பொறுத்தவரை சமாதானத்தைக் கொண்டு வருவதில் அவர் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபட்டுள்ளார்.—

எனவே அவர் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வார்'' என்பதே பார்வையாளர்களின் கருத்து — என்றும் பி.பி ஸி. மேலும் தெரிவித்தது.

பி. பி. ஸி. தமிழோசை தனது விமர்சனத்தில் பின்வருமாறு தெரிவித்தது:

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஏற்பட்டு 3 வாரங்கள் பூர்த்தியாகின்றன.

மோதல் தவிர்ப்பு மீறல்கள் இடம்பெற்று வருவதாக செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இதுவரை 200 மோதல் தவிர்ப்பு மீறல்கள் இடம் பெற்றதாக பத்திரிகைகள் கூறுகின்றன.

இந்தச் சம்பவங்களில் பல கணக்கில் எடுக்கப்பட முடியாத சிறு சம்பவங்கள் என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒரேயொரு மோதல் தவிர்ப்பு மீறல் சம்பவம் கிழக்கு மாகாணத்தில் நடந்ததாக கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்துக்கு தகவல் கொடுத்ததாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை விடுதலைப் புலிகள் கொன்றுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

உறுதிப்படுத்தப்படாதவை

உறுதிப்படுத்தப்படாத மோதல் தவிர்ப்பு மீறல் சம்பவம் குறித்து — அதிலும் முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து — பாதுகாப்புச் செயலகத்தின் செயற்பாட்டுப் பணிமனை பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டு வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் கிராமங்களுக்குள் செல்வதாகவும் —

அங்கு சில கிராம மக்களை

( 6ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு முறியாமல் தொடர ஐ.தே.கட்சி உதவ வேண்டும்

### ரணிலிடம் யாழ். ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் முறிவடையாமல் தொடர ஐ.தே.க. உதவ வேண்டும்.

கொழும்பு சென்றிருந்த யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் காலிமுகத் திடலில் நடந்த பரிசுத்த பாப்பரசரின் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரணில் விக்கிரமசிங்காவிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

பேச்சு மூலம் எட்டப்படும் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம் என்றும்—

தீர்வு காணும் முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும்—யாழ். ஆயர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

பேச்சுக்கள் வெற்றிபெற தமது கட்சி முழு ஆதரவு வழங்குமென யாழ். ஆயரிடம் ரணில் தெரிவித்தார். (இ-3-4)

## பூநகரி முகாமை அகற்றும் விடயத்தை சந்திரிகா அரசு இழுத்தடிக்கக்கூடாது

### அது நாட்டின் சாபக்கேடாகும் என்கிறார் சின்னமணி

கொழும்பு, ஜன. 31

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசு பூநகரி இராணுவ [illegible] யத்தை இழுத்தடிக்க முற்ப[illegible] அப்படியான ஒரு நிலைமைக்கு சந்திரிகா தள்ளப்படுவாரானால் அது இந்த நாட்டுக்கு ஏற்பட்ட சாபக்கேடாகவே முடியும்.

வடக்கு—கிழக்கு இணைப்பு விடயத்தைக் காரணமாக வைத்து ஐக்கியதேசியக் கட்சி அரசு இனப் பிரச்சினையை பல வருடகாலத்துக்கு இழுத்தடித்து புரையோடிய புண்ணாக்கியது.

ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அமோகமான மக்களின் ஆணையைப் பெற்றுள்ள சந்திரிகா குமார

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் இளைஞர் கைதானார்

கொழும்பு,ஜன.31

ஹொரகொல்லையில் உள்ள முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ- ஆர்.டி பண்டாரநாயகாவின் சிலையை புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை நித்தம்புவ பொலீஸார் கடந்த சனியன்று கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சியைச் சேர்ந்த பொன்னையா விஜயரத்தினம் (விஜயா) என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஐ-6)

முச்சந்தி முரளி



அப்ப பிடிச்ச பிடியாய்த் தான் நிக்க[illegible] போல...!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ

யாழ். - கந்தர்மடம் -- அரசடி வீதி

செல்வநாகபூஷணி அம்மன் ஆலய

பரிவாரமூர்த்தி

விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் ஆலய

புனராவர்த்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம்

**03 - 02 - 1995** வெள்ளிக்கிழமை

காலை 6 மணி முதல்

கிரியா காலம்

**01 - 02 - 95** புதன்கிழமை மாலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பம்.

**02 - 02 - 95** வியாழக்கிழமை காலை 8 மணிக்கும், மாலை 6 மணிக்கும் இடையில் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்

**03 - 02 - 95** வெள்ளிக்கிழமை யாகபூசை, மஹா பூர்ண குதி காலை 6 மணி முதல் 8-30 மணி வரையுள்ள லக்கினத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா குரு:

கைலை. இராஜேஸ்வரக் குருக்கள் (நயினை) தலைமையில்

கோவில் அர்ச்சகர்: சு. வாகீஸ்வரசர்மா

மேளம்:

பி. குப்புசாமி — நாதஸ்வரம்

கே. மகேந்திரராசா — தவில்

செ. குகநாதன்

ஆலய அறங்காவலர்

108, அரசடி வீதி,
கந்தர்மடம்.

(34942)


# காணாமற்போனோர் விசாரணையை 84 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்குக

கொழும்பு, ஜன. 31

1984இல் கிழக்கில் பெரும் எண்ணிக்கையானோர் காணாமல் போயுள்ளனர். 1988க்கு முன்பிருந்தே வடக்கிலும் பலர் காணாமல் போயுள்ளனர். எனவே காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தனது விசாரணையை 1984 ஜனவரியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட எம். பி. கி. துரைராஜசிங்கம் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1988 இல் இருந்து விசாரணை தொடங்கப்பட்டால் வடக்கு - கிழக்கில் காணாமல் போனோர் பலர் ஆணைக்குழு விசாரணையில் இடம்பெறாத நிலை ஏற்படும் எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காணாமல் போனோரது குடும்பங்கள் ஏழ்மை நிலையிலிருப்பதால் கொழும்பு சென்று ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கும் வசதி இருக்காது என்றும், அதனால் ஆணைக்குழுவின் அமர்வுகள் வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(இ 5)

# போதைவஸ்து கடத்தல் கோஷ்டியுடன் மோதல்

## பாகிஸ்தானில் மூவர் பலி

கராச்சி, ஜன. 13

பாகிஸ்தானில் போதைவஸ்து கடத்தல் கும்பலும், பொலீஸாரும் மோதியதில் மூவர் கொல்லப்பட்டனர். 8பேர் காயமடைந்தனர்.

பெஸாவார் நகர் அருகில் ஆயிரக்கணக்கான பொலீஸார் போதை வஸ்து தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட போது இந்த மோதல் இடம்பெற்றது.

பெருமளவு கஞ்சாவும், அபினும் இத்தேடுதலின்போது பொலீஸாரால் கைப்பற்றப் பட்டன.

விமான எதிர்ப்புத் துப்பாக்கி உட்ட பல நவீன ஆயுதங்களையும் பாகிஸ்தான் பொலீஸார் கைப்பற்றினர்.

(இ-5)

# நெல் அறுவடை ஆரம்பம்

வலி. மேற்கு ஜன. 31

வலி மேற்குப் பிரிவிலுள்ள சுளிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, சங்கரத்தை ஆகிய இடங்களில் தற்போது நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-175)

தற்காலிகப் பதிவேட்டில் நிரந்தரப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட விவரங்களுடன் மேலதிகமாக பயிர் வகை, பயிரின் பெயர் அதன் இனம், அறுவடையின் பின் செய்கை பண்ணப்படும் பயிர் வகை என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.


தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வெற்றிடம்

பின்வரும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன. வேண்டுகை, ஆள்சார் தரவுகளை உள்ளடக்கியதாக வேண்டுகையரின் கையெழுத்தில் இருத்தல் வேண்டும்.

**01. மேலாள்கைப் பயிற்றுநர்கள்/பொதுப் பயிற்றுநர்கள்**

உடன்படிக்கை அடிப்படையில் பணிசெய்வதற்கு வைப்பகத்தில் பட்டறிவுள்ள, வேறு வைப்பகங்களில் மேலாளர் தரம் 3 — 3, தரம் 3 — 2, தரம் 3 — 1இல் இருந்து ஓய்வு பெற்றவர்கள் வேண்டுகை அனுப்பலாம். பட்டறிவு, ஆற்றல், தமிழிற் பயிற்சி வழங்குவதற்கான இயல்பூக்கம், வைப்பகத்தில் சிறப்புத் தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**02. அலுவலர் (பயிலுநர்)**

தகைமைகள்:

பல்கலைக்கழக சிறப்புப் பட்டதாரிகள் அல்லது பட்டயக் கணக்காளர் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:

2,300 — 6,300
——————————— + 2,700 (5,000 - 9,000)
(100 X 10) (150 X 20)

அகவையெல்லை:

30 அகவைகளுக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

**03. மேற்பார்வையாளர்**

தகைமைகள்:

(1) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்:

1,800 — 3,800
——————————— + 2,700 (4,500 — 6,500)
(100 X 20)

அகவையெல்லை:

30 அகவைக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**04. இளநிலை எழுதுநர்/உதவிக் காசாளர்**

தகைமைகள்:

1. க. பொ. த. (சா/த) தேர்வில் கணிதம், தமிழ் உட்பட 5திறமைத் தேர்ச்சியுடன், குறைந்தது 6 பாடங்களில் ஒரே தடவையில் தேர்ச்சியும்.
2. க. பொ. த. (உயர்தர) தேர்வில் தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத் திட்டம்;

900 — 1,900
——————————— + 2,700 (3,600 — 4,600)
(50 X 20)

அகவையெல்லை; 19 — 25

**05. தட்டெழுத்து – சுருக்கெழுத்தாளர் (தமிழ்)**

தகைமைகள்:

க. பொ. த. (சாதாரண) தேர்வில் கணிதம், தமிழ், தட்டெழுத்து-சுருக்கெழுத்து ஆகிய பாடங்களில் திறமைத் தேர்ச்சியுடன் குறைந்தது 6 பாடங்களில் ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

க. பொ. த. (சாதாரண) தேர்வில் தட்டெழுத்து - சுருக்கெழுத்துப் பாடத்தில் தேர்ச்சி இல்லாதோர், ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தொழில்நுட்பக்கல்லூரியினால் நடத்தப்படும் தட்டெழுத்து - சுருக்கெழுத்துப் பாடத்தை உள்ளடக்கிய பயிற்சிநெறி ஒன்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத்திட்டம்:

900 — 1,900
——————————— + 2,700 (3,600 — 4,600)
(50 X 20)

அகவையெல்லை: 18 — 25

**06. சிற்றூழியர் – ஆண்**

தகைமைகள்:

க. பொ. த. [சா / தர] தேர்வில் குறைந்தது ஒரே தடவையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதியத்திட்டம்:

500 — 1.300
——————————— + 2,700 (3,200 — 4,000)
(40 X 20)

அகவையெல்லை: 18 — 25

★ வேண்டுகைகள் யாவும் **15-2-1995**க்கு முன்னர் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பணிநிலை வெற்றிடம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

பணிப்பாளர்,

**தமிழீழ வைப்பகம்,**

லெப்: கேணல் ராதாசாலை,
[illegible], யாழ்ப்பாணம்.

[சி-458]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

94 பரீட்சையில் தோற்றியவர்களுக்கான

**95 மீட்டல் DAY CLASS**

பொருளியல்:-
திரு. இராஜேஸ்வரன் 8.30 — 9.30

கணக்கியல்:-
திரு. கலைச்செல்வன் 12.30 — 2.00

அளவையியல்:-
திரு. A. பிரபா 11.00 — 12.00

வர்த்தகம்:-
திரு. சிவப்பிரகாசம் 9.30 — 11.00

✶ வாரத்தில் 4 நாட்களும் நடைபெறும்

[சி/463]



யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்

# உயர்தர வகுப்புகளுக்கு அனுமதி - 1995

எமது பாடசாலையில் விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முன்னோடிப் பரீட்சையின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 10-02-95**

[34941]



யாழ். வணிகர் கழகம்

# ஆண்டுப் பொதுக் கூட்டம்

எமது கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 27 - 01 - 95 வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றபொழுது பின்வரும் கௌரவ உத்தியோகத்தர்களும் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1. தலைவர்:- திரு. நா. த. அன்னலிங்கம்
2. செயலாளர்:- திரு. பொ. சந்திரலிங்கம்
3. பொருளாளர்:- திரு. க. வி. குலரெத்தினம்
4. உப தலைவர்:- திரு. க. நவரெத்தினம்
5. உப செயலாளர்:- திரு. மு. கிருபாலன்

யாழ். வணிகர் கழகம்

[சி-459]



யாழ் நகரில்

தென்னிந்திய திருச்சபையின்

# தொழிற்பயிற்சி வகுப்புகள்

புதிய பிரிவு தொழிற் பயிற்சி வகுப்புக்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாக உள்ளன.

✶ தையல்
★ தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து
✶ ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து
✶ விசேட ஆங்கில வகுப்பு

ஆகிய பாடங்களில் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு தகுதிகாண் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் அறுபது செலுத்தி கிழமை நாள்களில் காலை **8-30 — 4-00** மணி வரை **25 - 02 - 1995** க்கு முன்பாக பெற்றுக் கொள்ளலாம்

முகாமையாளர்,
தொழிற்பயிற்சி நிலையம்,
யாழ்ப்பாணம்.

நகர்ப்பணி,
41, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[8219]


# நன்றி நவிலல்

## திருமதி சிவகுரு இராசம்மா

எங்களின் அன்பு தெய்வமாக விளங்கிய திருமதி சிவகுரு இராசம்மாவின் ஆத்மா சாந்தியடைய 29-1-95 இல் நடைபெற்ற கிரியைகளில் எமது வேண்டுகோளுக்கிணங்க தமது சிரமங்களையும் பொருட்படுத்தாது கலந்து கொண்டு அன்றைய தினம் மதிய போசனத்திலும் பங்கு பற்றிய எமது உற்றார், உறவினர்களுக்கு திரு. கு சிவகுரு (கணவன்), திரு. ம. ஜெயரஞ்சன் (மருமகன்), திருமதி ஜெயரஞ்சன் சிவகுமாரி (மகள்) மற்றும் பேரப்பிள்ளைகளின் சார்பில் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் வைபவத்தை சிறப்பாக நடத்துவதற்கு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், குறிப்பாக தும்பளையைச் சேர்ந்த இளைஞர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

திருமதி வள்ளிப்பிள்ளை லோகசகாயம் (மருமகள்)
(ஆசிரியை, விக்கினேஸ்வரா கல்லூரி, கரவெட்டி)

திரு. சபாநாயகம் சபாரத்தினம் (பேறாமகன்)
(ஆத்தியடி, பருத்தித்துறை)

திரு. சிவகுரு கதிரவன்னசாமி (சகோதரர்)
(தும்பளை மேற்கு, பருத்தித்துறை)

திருமதி சபாநாயகம் சிவபாக்கியம் (சகோதரி)
(தும்பளை, பருத்தித்துறை)

(8221)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

## இராஜேஸ்வரி செல்லத்துரை

(பேபி ரீச்சர்)

(ஆசிரியை, யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)

வித்தாய்: 22-08-1939

விருட்சமாய்: 11-02-1994

திதி: **31-01-1995** (இன்று)

இறப்பும், பிறப்பும்
இறைவன் போடும் புதிர்க்கணக்கு
சொந்தமும், பந்தமும்
மனிதன் போடும் தப்புக்கணக்கு
குடும்பம் என்னும் கோயிலிலே குலவிளக்கு
கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் விடிவிளக்கு
கற்பித்தலில் கல்விக்கூடங்களில் மணிவிளக்கு
கல்விகற்கும் மாணவ, மாணவிகளின் ஒளிவிளக்கு
தாய்மொழியாம் தமிழுக்கு குத்துவிளக்கு
இயல், இசை, நாடகத்தின் கலங்கரை விளக்கு.

கணவனும், பிள்ளைகளும்

சாந்தன் வீதி,
கோண்டாவில் மேற்கு.

[34944]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்காய்ச்சல் நோய் வலயமாக மட்டக்களப்பை பிரகடனம் செய்க

## சுகாதார சேவைப் பணிப்பாளர் அரசிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 31
மட்டக்களப்பு மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் நோய் பரவி வருவதை அடுத்து இம்மாவட்டத்தை 'மூளைக்காய்ச்சல் பரவக்கூடிய வலயம்' என பிரகடனம் செய்ய வேண்டும் என்று அம்மாவட்ட சுகாதார சேவைகள் பகுதி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், அம்மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ். குமாரவேற்பிள்ளை இதனைத் தெரிவித்தார்.

மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்களின் இரத்தப் பரிசோதனைகளிலிருந்து கடந்த டிசம்பர் ஜனவரி மாதங்களில் 13 பேர் ஜப்பானிய மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 3 பேர் இறந்து விட்டனர்.

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் காரணியான 'Japanese Encephalitis' எனப்படும் வைரஸ், பன்றி போன்ற விலங்குகளிலேயே காணப்படுவதாகவும் 'கியூலெக்ஸ்' எனும் வகை நுளம்புகள் இவற்றின் இரத்தத்தை குடித்து பின்மனிதர்களுக்கு— பரப்புகின்றன என்றும், இதனால் பன்றி வளர்ப்பை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் பன்றிகளுக்கு தடுப்பூசி போடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பிலுள்ள ஒரு லட்சம் சிறுவர்களுக்கும் தடுப்பூசி போடப்படவுள்ளது ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு வருட இடைவெளிகளிலும் இத்தடுப்பூசிஏற்றப்படவேண்டும்.

இந்நோய்க்கான அறிகுறிகளான, காய்ச்சல், தலையிடி, வாந்தி போன்றவை தென்படும் நிலையில் சிகிச்சை பெற்றால் குணமடையலாம் என்றும் நோய் முற்றி வலிப்பு, அங்கலாய்ப்பு மனக்குழப்பம், கழுத்து தசைநார்களில் இறுக்கம், பேச்சில் வித்தியாசம், முகபாவனை வேறுபடல் போன்ற அறிகுறிகள் தென்படும் நிலையில், 20 வீதமானோர் இறக்க நேரிடுவதுடன் 50 வீதமானோருக்கு வலது குறைந்த நிலை ஏற்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டவிரோத பன்றி இறைச்சி விற்பனை பற்றியும் சுகாதாரத் திணைக்கள— அதிகாரிகள் கவனமெடுத்துள்ளனர். இதுவரையில் சட்டவிரோத பன்றி இறைச்சி விற்பனையில் ஈடுபட்ட நால்வர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் இவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன் ''கியூலெக்ஸ்'' எனப்படும் நுளம்புகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தெளிகருவிகள் பெறப்பட்டு மருந்து தெளிக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. (இ-14)

# வெடி மருந்துடன் மற்றும் ஒரு சிப்பாய் கைதானார்

## ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் மீண்டும் சம்பவம்

கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வாசஸ்தலத்தில் வெடிமருந்துகளுடன் மற்றும் ஓர் இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார் என பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி நேற்றைய 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதியும் அங்கு வெடிமருந்து கண்டு பிடிக்கப்பட்டதும்—

அது தொடர்பாக விசாரணை செய்த பொலிஸார் இரு இராணுவச் சிப்பாய்களை கைது செய்ததும்—

அந்த வெடிமருந்துகளை மீன்பிடிக்க மீனவருக்கு வழங்க தாம் வைத்திருந்ததாக அந்த சிப்பாய்கள் கூறியதும்... தெரிந்தவையே.

அதைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த போதும்—

மீண்டும் ஒரு சிப்பாய் வெடிமருந்துகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது [இ-3]

# அணைக்கட்டில் ஏற்பட்ட வெடிப்பால் பாரதூரமான விளைவு ஏற்படலாம்

## பாகிஸ்தான் பொறியியலாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 31
சமனலவேவ அணைக்கட்டில் ஏற்பட்டுள்ள ஒழுக்கை உடன் திருத்தாவிட்டால் பாரதூரமான விளைவு ஏற்படும் என அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலகில் 35க்கு மேற்பட்ட அணைக்கட்டு திருத்தவேலைகளை மேற்கொண்ட பாகிஸ்தான் பொறியியலாளர் எஸ். எம். தாரிக் இந்த எச்சரிக்கையை அரசுக்கு விடுத்துள்ளார்.

சமனலவேவ அணைக்கட்டில் ஏற்பட்டுள்ள சிறு வெடிப்பு மூலம் ஏற்பட்டுள்ள ஒழுக்கு பாரதூரமானது என்றும்—

ஒரு நிமிடமும் தாமதிக்காது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்—

இல்லாவிட்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும்— அவர் கூறியுள்ளார். (இ-3

## இந்து மகளிர் மன்றம்

சாவகச்சேரி இந்து மகளிர் மன்றம் அண்மையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. [க-117)

## புலிகளின் குரல் வானொலியில்

31 — 01 — 1995
செவ்வாய் இரவு

- ★ 8-01 — ஜனவரி மாதம் வீரச்சாவெய்திய மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — தமிழ்முழன் எழுதிய ''வீரத்தை உணர்த்திய மாவீரர்''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய ''சந்தர்ப்பம்''
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

01 — 02 — 1995
புதன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

- ★ 5-01 சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம் - 05
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# தொண்டா தலைமையில் 27 எம். பிக்கள் இணைவு

கொழும்பு, ஜன. 31
தமிழர் பிரச்சினை தொடர்பான ஏகோபித்து குரல் எழுப்பவும்—

தேசிய, சர்வதேச விவகாரங்களில் தமிழரின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும்— சிரேஷ்ட அரசியல் ராஜதந்திரியான அமைச்சர் எஸ். தொண்டமான் தலைமையில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் இ. தொ. கா., தமிழர்விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, மலையக மக்கள் முன்னணி, ஆகிய ஐந்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 27 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளையும் இந்த அமைப்பில் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது (இ 3)

## கொழும்புத் துறைமுகத்தில்

# ரூ.110 கோடி பெறுமதியான துணி வகைகள் கடத்தல்

கொழும்பு, ஜன. 31
கொழும்பு துறைமுகத்தில் இருந்து 110 கோடி ரூபா பெறுமதியான துணிவகைகள் கடத்தப்பட்ட சம்பவம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ளவர்த்தக நிறுவனத்துக்காக இந்த துணிவகைகள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டன என்றும்—

அவை கொழும்பு துறைமுகத்தில் உள்ள களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த சமயம் போலி ஆவணங்கள் மூலம் கடத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும்— அந்த செய்தி மேலும் தெரிவித்தது.

இது குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ-3)

## 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை:

# 20 ஆயிரத்து 610 மாணவர் தகுதி பெற்றுள்ளனர்

கடந்த ஓகஸ்ட் மாதம் நடந்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 20ஆயிரத்து 610 மாணவர்கள் உயர்தர பாடசாலைகளில் கல்வியைத் தொடர தகுதி பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மாணவர்களுக்கு உயர்தர பாடசாலைகளில் இடம் அளிக்கும் வகையில் கல்வியமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (இ-3)

# தேடப்பட்டு வந்த நால்வர் வெல்லம்பிட்டியில் கைது

கொழும்பு. ஜன 31
கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் இடம்பெற்ற பல பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக 4 பேரை வெல்லம்பிட்டியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்களில் இந்த நால்வர் முக்கிய நபர்கள் என்றும் —

இவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் — கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. [இ-3]

# கமக்காரர் அறிமுக அட்டையின் தன்மைகள்

*தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்ட கமக்காரர் அறிமுக அட்டை பற்றிய அறிக்கையின் ஒரு பகுதி ஜனவரி 27ஆம் திகதிய உதயனில் வெளிவந்தது. இறுதிப் பகுதி இங்கே வெளியிடப்படுகிறது.*

**வட்டத் தொடர்பாளர்**

கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களை கமக்காரர் அறிமுக அட்டை விடயமாக மக்கள் மத்தியில் செயற்படுவதற்கு ஒழுங்கமைத்துக் கொடுப்பதும் பரச்சாரங்களை மேற்கொள்வதும்.

**கோட்ட இணைப்பாளர்**

1. தமது கோட்டங்களுக்கு உட்பட்ட வட்டங்களில் கமக்காரர் அறிமுக அட்டை விநியோக மீளப் புதுப்பித்தல் வேலைகள் நடைபெறும் போது வட்டத் தொடர்பாளர்களையும், கிராமிய உற்பத்திக் குழுவினரையும் ஒழுங்குபடுத்தி வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளல்.

2. இவ்அட்டையின் பதிவுகள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட பின் இவரது உறுதிப்படுத்தலின் பின்பே அடையாள அட்டைகள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. வருடாவருடம் அறிமுக அட்டைகள் மீளப் புதுப்பிக்கப்படும்போது மேற்குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக அட்டை பரிசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு ஒப்பமிடப்படும்.

**மாவட்ட பதிவாளர்**

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளல்.

**மாவட்ட இணைப்பாளர்**

1. அரச / அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுஸ்தாபனங்களை ஒருங்கிணைத்து மாவட்டத்தில் விவசாய தேவைக்கான உள்ளீடுகள் கடனுதவிகள் என்பவற்றைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்தலும், அவற்றின் விநியோகங்கள் இவ் அட்டையினூடாகவே நடைபெற ஒழுங்கு செய்தலும்.

2. இவ் வேலைத்திட்டத்தில் தொடர்புடைய அனைவரையும் நேரடியாக தொடர்பு கொண்டு கண்காணித்தலும் ஒழுங்குபடுத்தலும்.

3. வேலைத் திட்டங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தொடர்புடையவர்கள் முன்வைக்கும்போது அவற்றைத் தீர்த்து வைப்பதற்குரிய ஆலோசனைகள் வழங்கல்.

**அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு**

1. மாவட்டத்தில் விவசாய தேவைக்கான விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ளல், விநியோகித்தல், தொடர்பாக ஒருங்கிணைந்த அடிப்படையில் இந்த நிறுவனங்களை அமைத்து உள்ளீட்டுப் பொருள்களைப் பங்கீட்டு அடிப்படையில் விவசாயிகளைச் சென்றடையக் கூடிய வகையில் கமக்காரர் அறிமுக அட்டை மூலமாகப் பதிவு செய்து வழங்குதல்.

2 உள்ளீடு விநியோக உதவித் திட்டத்தினை செயற்படுத்த முன்னரே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு தெரியப்படுத்தல். குறித்த நிறுவனங்கள் இவ் அட்டையினூடாக உள்ளீட்டு விநியோகங்களை மேற்கொள்ளும் போது பிணக்குகள் ஏற்படின் வட்டத் தொடர்பாளரிற்கோ, கோட்ட/ மாவட்ட இணைப்பாளருக்கோ உடனடியாக எழுத்து மூலம் தெரிவித்தல்.

**கமக்காரர் அறிமுக அட்டையின் தன்மைகள்**

1. இக் கமக்காரர் அறிமுக அட்டையானது ஐந்து வருடங்களிற்கும் பயன்படுத்தக் கூடியது. அதே வேளை இதனை வருடா வருடம் புதுப்பிப்பதுடன் வேறு விசேட தேவை கருதியும் புதுப்பிக்கப்படலாம். புதுப்பித்தலுக்காக 25/- கட்டணம் அறவிடப்படும்.

2. அடையாள அட்டை தேவைக்கென விண்ணப்பப் படிவம் நிரப்பப்படும்போது கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட இரண்டு புகைப்படப் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். பின்னர் இதிலொன்று அடையாள அட்டையில் இணைக்கப்படும்.

3. இவ் அட்டையின் முதற் பக்கம் விண்ணப்பதாரியின் சுய விவரங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

4. இவ் அட்டையுடன் தொடர்புடைய காணிப் பதிவேடானது நிரந்தரப் பதிவோடு தற்காலிகப் பதிவேடு என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நிரந்தரப் பதிவேட்டில் நெற்காணி, மேட்டுக்காணி போன்றவற்றின் பயிர்ச் செய்கை விவரம் வட்ட, கிராம ரீதியாக காணி அமைந்துள்ள இடம், காணிப் பெயர், செய்கைபண்ணப்படும் நிலப்பரப்பின் இலக்கம் காணி சொந்தமா/ குத்தகையா என்பதும் குத்தகையாயின் உரிமையாளர் பெயர், முகவரி போன்ற விவரங்கள் பதிவு செய்யக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

மேலும் இவ் அட்டையில் தனித் தனிப் பகுதிகளாக உர விநியோகம், விதை விநியோகம் ஏனைய விவசாய உள்ளீடு உபகரண விநியோகம் போன்றனவும் விவசாயக் காப்புறுதி பற்றிய பதிவுகள், உற்பத்தி ஊக்குவிப்பு நிதி அறவீடுகள் சம்பந்தமான விவரம், பெறப்பட்ட நட்டோத்தரவாதம் பாதிப்பு நிவாரணம், கமத் தொழில் கடன்கள் விலங்கு வேளாண்மை விவரங்கள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உர விநியோகம் [illegible] தலைப்பின் கீழ் முறையே திகதி, வழங்கும் நிறுவனம், பருவம்/போகம், பயிர் வகை, உரவகை, (கி.கி) வழங்குபவரின் கையொப்பம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

விதை தானிய விநியோகம் என்பதன் கீழ் முறையே திகதி, வழங்கும் நிறுவனம், பெற்றுக் கொள்ளும் நிறுவனம், விதை தானிய வகை, அளவு, கிலோ ஒன்றிற்கான விலை செலுத்திய/பெற்ற தொகை, பற்றுச் சீட்டு இல, வழங்குபவர் கையொப்பம் போன்றன பதிவு செய்யும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய விவசாய உள்ளீடு உபகரண விநியோகம் என்பதன் கீழ் திகதி, வழங்கும் நிறுவனம், போகம், பருவம், பயிர் வகை, உள்ளீட்டுப் பொருள்களின் விவரம், வழங்குபவரின் கையொப்பம் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளது.

விவசாய காப்புறுதிப் பத்திர விவரங்கள் என்பதன் கீழ் முறையே திகதி, கிராமிய உற்பத்திக் குழுப்பகுதி இல, நிலப் பிரிவு, (பெயர்/இல) பரப்பு, விவசாய காணி இடாப்பின் வரிசை எண், போகமும் பருவமும், பயிர் வகை, செலுத்த வேண்டிய மொத்தப் பணம், செலுத்திய தவணைப் பணம், பற்றுச் சீட்டு இல. முகாமையாளர் கையொப்பம், குறிப்பு போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி ஊக்குவிப்பு நிதி எனும் விடயத்தின் கீழ் முறையே திகதி, போகம்/பருவம் பயிர் வகை, பரப்பு, செலுத்திய தொகை, பற்றுச் சீட்டு இலக்கம், செலுத்த வேண்டிய மொத்த விதம், உத்தியோகத்தர் கையொப்பம், குறிப்பு போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட நட்டோத்திரவாதம் பாதிப்பு நிவாரணம் [illegible] கிராமிய உற்பத்திக் குழுப் [illegible] (பெயர்/இல) விவசாய காணி இடாப்பில் வரிசை எண் பரப்பு, போகம் / பருவம் பயிர் வகை நட்டோத்தரவாதம், காப்புறுதிக்கு அல்லது வழங்கும் நிலையத்திற்கு செலுத்திய / செலுத்தவேண்டிய தொகை பற்றுச்சீட்டு இல, உத்தியோகத்தர் கையொப்பம் போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் கடன்கள் பற்றிய பதிவில் திகதி, கடன் வழங்கும் நிறுவனம், பயிர் வகை, வழங்கிய கடன் விவரம், கடன் வரவு, மீளச் செலுத்தப்பட்ட பணம், திகதி செலுத்த வேண்டிய விதம், முகாமையாளர் ஒப்பம், குறிப்பு எனும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

விலங்கு வேளாண்மை விவரங்களை உள்ளடக்கிய பகுதியில் பால், மொத்த எண்ணிக்கை, சிகிச்சைக்குட்படுத்தப்பட்டவற்றின் எண்ணிக்கை, நோய், விவரமும், அவற்றிற்கான தடுப்பூசி சிகிச்சைவிவரமும். கையொப்பம், திகதி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரமாக அலுவலர்கள் பார்வையிடற் பதிவேடு என்பதன் கீழ் விவசாயம், கால்நடை தொடர்பாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் விஜயத்தின் போது அதற்கான பிரிவுகளை மேற்கொள்ளும் வகையில் திகதி, நிறுவனங்களின் பெயர், பதவிப் பெயர், கையொப்பம் போன்ற விவரங்களும் இவ்வட்டையில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களைத் தன்னகத்தே உள்ளடக்கிய இக் கமக்காரர் அறிமுக அட்டைத் திட்டமானது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பாரிய முயற்சிகளின் விளைவாகஇன்று ஓர் எல்லையைத் தொடுமளவிற்கு வளர்ந்துள்ளது இத்திட்டமானது தொடர்ந்தும் உரிய [illegible] சிறப்பாகச் செயற்படுவதற்கு தொடர்புடைய அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறது. ★

# 189 அகதி முகாம்கள் புத்தளத்தில் மூடப்படும்

புத்தளம் மாவட்டத்திலுள்ள 189 அகதி முகாம்கள் விரைவில் மூடப்பட்டு அதற்குப் பதிலாக இடம்பெயர்ந்தவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக புத்தளம் மாவட்ட புனர்வாழ்வுப் பணிக்கு பொறுப்பான யாழ். மாவட்ட எம். பி. டாக்டர் ஐ.எம். இலியாஸ் தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின்படி இடம்பெயர்ந்துள்ள குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்நிதியைக் கொண்டு இடம்பெயர்ந்தவர்கள் சொந்தமாக குடியிருப்பு காணியை கொள்வனவு செய்து தமக்கென வீடுகளை அமைத்துக் கொள்ள முடியும் என்றும் —

அதன் பிறகு சுயதொழில் புரிவதற்காக அவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் புரிய ஆரம்பித்து ஆறு மாதங்களுக்குப் பின் அவர்களுக்கான நிவாரண விநியோகம் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ். பாடசாலை சேவை சிற்றூர்தி கட்டண விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ். மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளின் கட்டண விவரங்களை யாழ்.மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

நாளை பெப்ரவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் கட்டண விவரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| அச்சுவேலி | — யாழ்ப்பாணம் | 400- ரூபா |
| புத்தூர் | — யாழ்ப்பாணம் | 350- ரூபா |
| நீர்வேலி | — யாழ்ப்பாணம் | 300- ரூபா |
| கோப்பாய் | — யாழ்ப்பாணம் | 275- ரூபா |
| மூளாய் | — யாழ்ப்பாணம் | 400- ரூபா |
| சங்கானை | — யாழ்ப்பாணம் | 400- ரூபா |
| வட்டுக்கோட்டை | — யாழ்ப்பாணம் | 400- ரூபா |
| மானிப்பாய் | — யாழ்ப்பாணம் | 250- ரூபா |
| சண்டிலிப்பாய் | — யாழ்ப்பாணம் | 300- ரூபா |
| ஆனைக்கோட்டை | — யாழ்ப்பாணம் | 200- ரூபா |
| மல்லாகம் | — யாழ்ப்பாணம் | 325- ரூபா |
| உடுவில் | — யாழ்ப்பாணம் | 250- ரூபா |
| தாவடி | — யாழ்ப்பாணம் | 250- ரூபா |
| கோண்டாவில் | — யாழ்ப்பாணம் | 250- ரூபா |
| புன்னாலைக்கட்டுவன் | — யாழ்ப்பாணம் | 320- ரூபா |
| உரும்பிராய் | — யாழ்ப்பாணம் | 275- ரூபா |
| கோண்டாவில் | — யாழ்ப்பாணம் | 250- ரூபா |
| திருநெல்வேலி | — யாழ்ப்பாணம் | 200- ரூபா |
| அச்செழு | — உடுவில் | 300- ரூபா |
| ஏழாலை | — உடுவில் | 300- ரூபா |
| மிருசுவில் | — யாழ்ப்பாணம் | 550- ரூபா |
| கொடிகாமம் | — யாழ்ப்பாணம் | 500- ரூபா |
| சாவகச்சேரி | — யாழ்ப்பாணம் | 400- ரூபா |
| நுணாவில் | — யாழ்ப்பாணம் | 325- ரூபா |
| கைதடி | — யாழ்ப்பாணம் | 300- ரூபா |

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு போத்தல் பால் எடுக்கும் யமுனாபாரி ஆடும், அதன் இரண்டு கடாக்குட்டிகளும், குட்டி ஈனும் பருவத்தில் இருக்கும் சனல் ஆடும் விற்பனைக்குண்டு. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [34926]

### இலகு திருமண சேவை

27 வயது, சித்திரை 3, செவ்வாயற்ற அழகிய ஆங்கில ஆசிரியைக்கு மணமகனும், 31 வயது, திருவோணம், செவ்வாயற்ற கனடா என்ஜினியருக்கு மணமகளும், 31 வயது, ஆயிலியம் 7இல் செவ்வாய் Bio Chemist Norway மணமகனுக்கும் ஏற்ற மணமக்கள் தேவை. திருமணம் இலங்கையில். விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. [34924]

### மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றறிகளும் உண்டு. கஜன்ஸ் வாச் வேக்ஸ், 12, புகையிரத வீதி, சுன்னாகம். [7879]

## சஞ்சிகை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் 'செய்தி மலர்' சஞ்சிகை 11ஆவது வெளியீடு தெல்லிப்பளைப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. கே. எஸ். சிவமகராசா தலைமையில் நடைபெற்றது. (இ-13)

## மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஜன 31

வடமராட்சிக் கோட்டக் கிராம உற்பத்திக் குழுக்களின் மாதாந்த ஒன்றுகூடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாலி சந்தி சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். [க]

## அவியாத பாண் விற்பனை

தென்மராட்சி, ஜன. 31

மா தட்டுப்பாட்டினால் பாணின் விற்பனை அதிகரித்ததையடுத்து தென்மராட்சிப் பகுதியில் உள்ள பல பேக்கரிகளில் தரம் குறைந்த அவியாத பாண் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். [க-117]

## வட்டு. வடக்கில் நடமாடும் சேவை

வலி. மேற்கு, ஜன. 31

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவு நடமாடும் சேவை வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் எதிர் வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பிளவத்தை அ. மி. த. க. பாடசாலையில் நடைபெறும். (க-175)

## குழாய்க்கிணறு

யாழ்ப்பாணம், ஜன. 31

மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையை ஓரளவு நிவர்த்தி செய்யும் முகமாக சந்தரோடைப் பகுதியிலுள்ள கயல் கண்ணித்திட்டியில் பொதுமக்கள் பாவனைக்காக குழாய்க்கிணறு ஒன்றினைத் தேச நிர்மாணிகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். (க)

## 'A' LEVEL CENTRE

1st. LANE
PIONT - PEDRO ROAD,
JAFFNA.

**சிங்கள வகுப்பு**

ஆசிரியர்:
**Miss A. ALISTA**

ஆரம்பம்:
**03 - 02 - 1995**

FRI. & MON.
4-30 — 5 30p.m.
[சி-334]

## CUSTOMERS PLEASE CALL EARLY!

According to News Paper Advertisements speedy steps are being undertaken for the supply of Electricity to Consumers. Hence it will facilitate the ready use of your Domestic Electrical Appliances if your Audio Hits, T. V., Deck, Two-in-one sets Etc. are properly tested by us to ascertain whether they are in Working Condition.

Where ever Defects are Detected Necessary Repairs are Effected at Comparatively low costs. Hence Please do not hesitate to call on us Early.

**DILKA WATCH AND RADIO WORKS**
284, STANLEY ROAD,
ARIYAKULAM JUNCTION,
ADJOINING "VANAVIL"
JAFFNA.

Branch: Kandy Road, Chavakachcheri.

[C-333]

## அறிவித்தல்

வட இலங்கைச் சங்கீத சபை

### செயன்முறைத் தேர்வு - 1995

மேற்படி சபையின் செயன்முறைத் தேர்வுகள், 1995 ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறை நாட்களில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி தேர்வுக்கு, யாழ். மாவட்டத்தில், தேர்வாளர்களாகக் கடமையாற்ற விரும்பும், இசை, நடனம் மிருதங்கம் நாடகம் பண்ணிசை ஆகிய துறைகளில், தேர்வாளர்களாகக் கடமையாற்றத் தகுதியுடைய, ஆசிரியர்கள், தங்கள் தகைமைகளையும், அனுபவத்தையும் தேர்வாளராகக் கடமையாற்ற விரும்பும் துறையையும் குறிப்பிட்டு 1995 — 02 — 17 வெள்ளிக்கிழமைக்கு முன், பதிவுத் தபாலில் எனக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். சபை உறுப்பினராயின், அங்கத்துவ இலக்கத்தைக் குறிப்பிடவும்.

செல்வி. தி. பெரியதம்பி
கல்விப்பணிப்பாளரும் (வலயம்-I)
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். (சி/453)

## இன்றே முந்திக்கொள்ளுங்கள்

வாடிக்கையாளர்களே!

பத்திரிகை விளம்பரத்தின்படி மின்சாரம் கிடைப்பதற்கான வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதால் உங்கள் வீட்டு மின்சார உபயோகப் பொருள்கள், ரி. வி., டெக் Audio Hits, Two in one sets, மின் உபயோகப் பொருள்கள் அனைத்தும் பல ஆண்டுகள் பாவிக்கப்படாமல் இருப்பதால் அவைகள் மின்சாரத்தில் இயங்க தயாராக உள்ளனவா என பரிசோதனை செய்து உத்தரவாதத்துடன் சேவிஸ் செய்து அவற்றில் உள்ள பிழைகளை குறைந்த செலவில் திருத்திப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே எம்மை நாடுங்கள்.

டில்கா
**வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்**
284, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளச் சந்தி,
(வானவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-332)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 09 — 1941

மறைவு: 11 — 02 — 1994

அமரர்
**குமாரசாமி செல்வச்சந்திரன்**
(B. A)

ஆண்டு ஒன்று போனாலும் பாசமது போகுமோ?
முத்தான புன் சிரிப்பின் முகம் மனம் விட்டு -
மாறுமோ
பார்ப்பதற்கு பலதிருக்க பாதியினிலே விட்டு விட்டு
நாம் நினையா வேளையினிலே எம்மை விட்டேன்-
சென்றனையோ

உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம். இன்று 31-01-95 நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

பண்டிதர் குடும்பத்தினர்,
தெணி, வல்வெட்டித்துறை. (34918)

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்''

யாழ்ப்பாணம்
அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்

37ஆவது ஆண்டு

## தமிழ் இசை விழா

இடம்: நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 1 - 2 - 1995 முதல் 5 - 2 - 1995 வரை

விழாத்தலைவர் தவில் மேதை லயஞானபூபதி
**திரு. பொ. பழனிவேல்**
(சின்னப்பழனி) அவர்கள்
இசையரசு பட்டஞ் சூட்டிக் கௌரவிக்கப் படுகிறார்கள்.

ரஸிகப்பெருமக்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

செயற்குழு
அ. இ. த. மன்றம்.

(34931)

31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்: 25 — 06 — 1925

அம்மன் அடியில்: 01 — 01 — 1995

**அமரர் சின்னையா இரத்தினம்**
(பிரபல வெற்றிலை வியாபாரி சாவகச்சேரி)

01-01-95 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி வீட்டுக் கிரியைகள் இன்று (31-01-95) செவ்வாய் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அவ்வமயம் தாங்களும் எம்முடன் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர், அஞ்சலிச் செய்திகளை பத்திரிகை மூலம் வெளியிட்டோர் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், வைத்தியர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

பெருங்குளம் பிள்ளையார் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி. (34929)

## களனி பல்கலைக்கழகத்தில் கம்பஹா ஆயுள்வேதகல்லூரி

கொழும்பு, ஜன. 31

கம்பஹா ஆயுள் வேதக் கல்லூரியை களனி பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் திருத்தச் சட்ட மூலத்தின் பிரகாரம் கடந்த 25 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இவ்விணைப்பின் மூலம் மேற்படி கல்லூரியின் சகல நடவடிக்கைகளும் கல்வி உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும் பிரிவாக அமையும்.

ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்கள் நீண்டகாலமாக பல்கலைக்கழக அந்தஸ்து கோரி வந்ததுடன் கடந்த வருடத்தில் ஒருமாத காலத்திற்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தி வந்ததும் தெரிந்தவையே. (ஐ-14)

## மரக்கறி விதைகள்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் மரக்கறி விதைகளை சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

அத்துடன் சமாச விற்பனை நிலையத்திலும் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சமாச தலைவர் தெரிவித்துள்ளார். (க-17)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னையா குணரெத்தினம்**
(ஓய்வு பெற்ற சிரேஷ்ட வருமானவரி உத்தியோகத்தர்)

மண்ணில்: 26-02-1941

விண்ணில்: 11-02-1994

திதி: 31 - 01 - 1995

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடர் விளக்காய், பண்பின் சிகரமாய், பாசமுடன் வாழ்ந்து நல்ல மனையறத்தில் நந்தா விளக்காய் ஒளிதந்த அன்புத் தெய்வமே! குணத்தால் அரிய இரத்தினமே! அல்லும் பகலும் உன் நினைவால் ஆறாத்துயரில் ஆழ்கின்றோம், பல்லாண்டு கழிந்தாலும் உன் நினைவு மாறாது. உங்கள் ஆன்மா இறைவனடியில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.


உன் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
செல்லத்துரை இரத்தினபூபதி.
[மாமியார்]

4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [34938]

யாழ்ப்பாணப் பிரதேச பெருமக்களே!

## பஜாஜ் திறீவிலரின் உரிமையாளராவதற்கு

## உங்களுக்கு நல்லதோர் சந்தர்ப்பம்!



இன்று பெருமளவில் குடும்ப அங்கத்தவர்களின் பாவனையில் உள்ளது பஜாஜ் திறீவிலர் சுயதொழில் வாய்ப்பிற்கும், பிரயாணிகளின் சொகுசுப் பயணத்திற்கும் ஒப்பற்ற வாகனம் பஜாஜ் திறீவிலர். இவ்வாகனம் சிறிய கஷ்டமான பாதைகள், மூலை முடுக்குகள் எல்லாம் இலகுவாகப் பயணம் செய்ய உதவும். இது பொருளாதார ரீதியில் மிகவும் சிக்கனமானது.

★ இதன் பராமரிப்புக்கும், எரிபொருளுக்குமான செலவு ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 2/55 மட்டுமே

★ ஒரு புதிய பஜாஜ் திறீவீலரின் விலை ரூபா 1,12,500/-

## டேவிட் பீரிஸ் மோட்டார் கொம்பனி லிமிட்டட்

த. பெ. இல: 1909, 69, ஹைட்பார்க்கோணர், கொழும்பு - 2
தொலைபேசி இல: 687167, 687169 [34927]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
202/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தலையீட்டை வாங்குவதா?

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் குறித்து அமெரிக்க அரசாங்கத்துக்கு விவரம் அறிவிப்பதற்காக, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அந்த நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கிறார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான பேச்சுக்கள் மேலும் முன்னேறிச் செல்ல முடியாது தரித்து நிற்கும் இவ்வேளையில், அமைச்சர் கதிர்காமர் அமெரிக்கா சென்றுள்ளதன் பின்னணி என்ன, அதன் அவசியம் என்ன என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

இனப்பிரச்சினையில் சமரசம் அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கு வெளிநாடு எதுவும் அழைக்கப்படவில்லை. அத்தகைய நோக்கம் அரசுக்கோ அன்றி விடுதலைப் புலிகளுக்கோ இருக்கவில்லை. அப்படியிருக்க, இப்பேச்சுக்கள் குறித்து அமெரிக்காவுக்கு விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டது ஏன்?

தாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைக் கண்டு இந்தியா சீற்றம் அடைந்துவிடக் கூடாது என்பதற்காகவும், அந்த நாட்டுக்கும் லக்ஷ்மன் கதிர்காமரை அனுப்பி சந்திரிகா சில விளக்கங்களை அளித்திருந்தார்.

இப்போது, பேச்சுவார்த்தையின் பிந்திய நிலைமைகளை விளக்குவதற்காக அவரை அமெரிக்காவுக்கும் அனுப்பியிருக்கிறார். இனப்பிரச்சினைப் பேச்சு சம்பந்தமான மேலதிக விவரங்களைஅறிவதில்அமெரிக்கஅதிகாரிகள் விருப்பம் கொண்டுள்ளார்கள் என்பதால், அமைச்சர் ஒருவரை அனுப்பி அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றக் காட்டப்படும் அவசரத்தின் பின்னால் முக்கிய உள்நோக்கம் இல்லாமல் இருக்காது. சோழியன் குடுமி சும்மாவா ஆடும்?

ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை நிமிர்த்தி நிறுத்துவதற்கு மிகப்பெரிய அளவில் நிதி தேவைப்படுகிறது. இந்த நிதியைப் பெறுவதற்கு அமெரிக்காவை "கைக்குள் போட்டாக" வேண்டும். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் மீதும் அமெரிக்காவே பெருமளவில் செல்வாக்குச் செலுத்துகிறது.

மேலும் அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புக் கொண்டால் அதனிடம் இருந்து மட்டுமன்றி ஏனைய நாடுகளில் இருந்தும் அதிகமாக நிதிஉதவி கறக்கலாம். வெளிநாட்டு முதலீட்டுக்கும் இது மிகப் பெரிதாக உதவும். (இவற்றைக் கருத்திற் கொண்டே இரணவில "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" விடயத்திலும் அரசு விட்டுக் கொடுத்தது)

இந்தக் காரணங்களால், அமெரிக்க அரசு அதிகாரிகளின் விருப்பத்தை — சமாதானப் பேச்சுப்பற்றி விவரம் அறியும் விருப்பத்தை — நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஸ்ரீலங்கா அரசுக்கு உண்டாகி இருக்கிறது!

ஆனால் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இடையே நடைபெறும் உள்நாட்டு விவகாரம் ஒன்று குறித்து வெளிநாடு ஒன்றுக்கு விவரம் தெரிவிப்பது என்ன பொருத்தம்?

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு பேச்சுவார்த்தைகளில் அல்லது இனப்பிரச்சினைத் தீர்வில் அமெரிக்கா தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கு இடமளிப்பதாகும். மறு கோணத்தில் நோக்கினால் ஸ்ரீலங்கா அரசு தனக்கு விரும்பிய தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவை துணை சேர்க்கும் மறைமுக ஏற்பாடாகவும் கருதலாம்.

உலகின் எந்த மூலையில் நடக்கும் எந்தவித அரசியல் விவகாரத்திலும் தான் செல்வாக்குச் செலுத்த வேண்டும் அல்லது தலையிட வேண்டும்; தானே "பெரியவனாக" நிற்க வேண்டும் என்ற விருப்பம் உடையது அமெரிக்கா.

எனவே சமாதானப் பேச்சு விவரத்தை அமெரிக்காவுக்கு விளக்குவது என்பது ஒரு வெளியார் தலையீட்டை வலிந்து வாங்கிக் கொள்வதாகவே முடியும்.

# மக்களை நாடிச் சென்று குறை தீர்ப்பதில்
# வலி. மேற்கு பிரதேச செயலகம் முன்மாதிரி

## மக்களைப் பெரிதும் கவர்ந்திழுக்கும் நடமாடும் செயலக சேவை

கடந்த காலங்களில் தென்பகுதியில் நடமாடும ஜனாதிபதி செயலக சேவைகள் நடத்தப்பட்டு வந்தன.

ஜனாதிபதி தமது அமைச்சர்கள் மற்றும் பரிவாரங்களுடன் மாவட்டங்கள் தோறும் மக்களை நாடிச் சென்று அவர்களது குறைகளைத் தீர்க்க வசதியாக பெரும் ஏற்பாடுகளுடன் அவை நடத்தப்பட்டன.

போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் வடபகுதி மக்கள் தமக்குரிய அத்தியாவசிய சேவைகளைக்கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு இது போன்ற நடமாடும் செயலக சேவை என்பது எட்டமுடியாத ஒன்று என்றநிலை இதுவரை இருந்து

**செய்திக்கட்டுரை**

வந்தது.

ஆனால் அந்த எண்ணத்தை மாற்ற முடியும் என்பதை வலி. மேற்கு பிரதேச செயலகம் செயலால் நிரூபித்துள்ளது.

தென்பகுதியில் மட்டுமல்ல வடக்கிலும் அரச அதிகாரிகள் மக்களை நாடிச்சென்று தம்மால் இயன்ற சேவையை ஆற்றமுடியும் என்பதை தனது முதலாவது நடமாடும் செயலக சேவை மூலம் அது எடுத்துக்காட்டியுள்ளது.

பின்தங்கிய கிராம மக்களை நாடிச் சென்று சேவை செய்யும் நோக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த முதலாவது நடமாடும் செயலக சேவை கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வட்டுக்கிழக்கு ஜே-157 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்காக அந்த நடமாடும் செயலக சேவை நடத்தப்பட்டது.

வலி மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 25 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இந்த நடமாடும் செயலக சேவை எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாகவே வட்டுக்கிழக்கு ஜே-157 கிராம சேவையாளர் பிரிவில் முதலாவது நடமாடும் பிரதேச செயலக சேவை நடத்தப்பட்டது.

வலிமேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடந்த நடமாடும் செயலக சேவை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமானது.

### அதிகாரிகளை நாட மக்கள் தயக்கம்

கல்வி அறிவு குறைந்த மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக அதிகாரிகளை நாடிச் செல்வதற்கு தயங்குகிறார்கள். அல்லது தமது தேவைகளுக்காக யாருடன் தொடர்பு கொள்வது என்று தெரியாத நிலையில் உள்ளனர்.

இத்தகைய நிலைமையை மாற்றி சகல மக்களும் தமது பகுதியைச் சேர்ந்த சகல திணைக்கள அதிகாரிகளையும் நேரில் சந்தித்து தயக்கமின்றித் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியாகவே நடமாடும் செயலக சேவை நடத்தப்படுவதாக வலி மேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா சேவையை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அதிகாரிகளை நாடிச் செல்லும் சரியான வழி தெரியாததால் மக்கள் இடை நடுவில் சிலரால் ஏமாற்றப்படும் சம்பவங்களும் நடக்கின்றன என்றும் அவர் கூறினார்.

இறப்பு, பிறப்பு பதிவுகள் அடையாள அட்டை, திருமணப் பதிவு, பொதுசன மாதாந்த உதவிப் பணம், சுகாதார பிரச்சினைகள், கல்வி தொடர்பான பிரச்சினைகள், விவசாய பிரச்சினைகள், போஷாக்கு குறைபாடு, ஜனசக்தி, அபிவிருத்தி திட்டங்கள் சிறுகைத்தொழில், பாடசாலைகள் போன்ற விடயங்கள் அந்த நடமாடும் செயலக சேவையின்போது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று அவர்களின் பிரச்சினைகள், தேவைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண வகை செய்யும் இந்த நடமாடும் சேவையை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. ச. பரமேஸ்வரன் அங்கு கூடியிருந்த மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

பிரதேச செயலகங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களால் பிரதேச செயலாளர்கள் ஏனையோரின் அனுமதி இன்றியே மக்களுக்கு சேவையாற்றக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.



நடமாடும் செயலக சேவையின் போது வலி. மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா பொதுமக்களில் ஒருவரின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

### அன்பளிப்புகள்

நடமாடும் செயலக சேவையின் ஆரம்பத்தில் அப் பகுதியில் போசாக்கு குறைவால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட 35 குழந்தைகளுக்கு வலிமேற்கு பிரதேச சபையால் இலவசமாக ஜீவாகாரம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து இடம்பெயர்ந்து வறுமையில் வாடும் நான்குகுடும்பங்களுக்கு ஹரிக்கேன் விளக்குகளும், 14 குடும்பங்களுக்கு வாளிகளும், ஊனமுற்ற ஒருவருக்கு ஊன்றுகோல் ஒன்றும் வழங்கப்பட்டது.

யாழ். வை. எம். சி. ஏ நிறுவனத்தினர் இவற்றை அன்பளிப்பாக வழங்கினர்.

வறுமை நிவாரண உணவு முத்திரைகள் தொடர்பான மக்களின் பிரச்சினைகள் அறியப்பட்டு அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டது

சிலருக்கு உடனடியாக புதிய முத்திரைகள் வழங்கப்பட்டன.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் 34 குடும்பங்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதற்காக 126 விண்ணப்பங்களும், திருமண சான்றிதழ் பெறுவதற்காக 9 விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

விண்ணப்பங்கள் முத்திரை எதுவும் ஒட்டப்படாமலேயே சம்பந்தப்பட்டவர்களின் கையொப்பம் பெறப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அவற்றுக்கான முத்திரைகளை சிலர் அன்பளிப்பாக வழங்க முன்வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதே போன்று தேசிய அடையாள அட்டைகளை பெறுவதற்கான 12 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அத்துடன் தொலைந்த அடையாள அட்டையை மீளப் பெற்றுக் கொள்வதற்காக 5 விண்ணப்பங்களும், அடையாள அட்டை புதுப்பிப்பதற்கான 18 விண்ணப்பங்களும் மக்களிடமிருந்து பெறப்பட்டன.

அப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்பட்ட ஜனசக்தி திட்டம், வறிய குடும்பங்களுக்கான ஆடு வளர்ப்புத் திட்டம் என்பன நடமாடும் செயலக சேவையின் போது மதிப்பீடு செய்யப்பட்டன.

இத்திட்டங்கள் உரிய நோக்கத்தை அடையக்கூடிய நிலையில் இல்லாமல் இருந்தது அவதானிக்கப்பட்டது.

அப்பகுதி விவசாயிகள் ஐந்து பேர் தம்மை கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொண்டனர்.

### விண்ணப்பங்கள் பரிசீலிப்பு

வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவரும் —

இரு கண் பார்வையையும் இழந்த பெண் ஒருவரும் —

ஆனைக்கால் நோயினால் பாதிக்கப்பட்ட சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மாணவன் ஒருவரும் தமக்கு உதவி கோரி அதிகாரிகளிடம் விண்ணப்பித்தனர். அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

ஆதரவற்ற சிறுவன் ஒருவனை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் சேர்த்துக் கொள்ள சிபார்சு செய்யப்பட்டது.

### இலவச புகைப்படம்

தேசிய அடையாள அட்டைக்காக 112 பேரை அங்கு இலவசமாக புகைப்படம் எடுக்கப்பட்டது. அவர்களுக்கு முத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

**அராலி**
**உதயன் செய்தியாளர்**

சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 78 சிறுவர்களுக்கு பூச்சி மருந்து விநியோகிக்கப்பட்டது.

காலை 9 மணிக்கு ஆரம்பித்த நடமாடும் செயலக சேவை பிற்பகல் 3 மணியளவில் நிறைவுபெற்றது.

அடுத்த நடமாடும் செயலக சேவை வட்டு. வடக்கு ஜே-158 கிராம சேவையாளர் பிரிவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. ★

## எழுவர் குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற இணைப்புக்குழு கூட்டத்தில் இதற்கெனக் குழு ஒன்றை யாழ். அரச அதிபர் நியமித்துள்ளார்.

யாழ். பிரதேச செயலர் க. குணராசா தலைமையில் ஏழு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (க-17)

அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்க்கும் நோக்கம் இல்லை

# தனது நிலைப்பாட்டிலிருந்து தளர மறுத்து தீர்வு யோசனையை அரசு தயாரிக்கிறது

கொழும்பு, ஜன 31

"தமிழ்மக்களின் அன்றாடப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகள் தெரிவித்த யோசனைகள் குறித்து தனது நிலைப்பாட்டில் இருந்து தளராத அரசு பெப்ரவரி மாத இறுதிக்குள் தீர்வு யோசனைகளை தயாரிக்க முனைகிறது"

கொழும்பு தமிழ் பத்திரிகையான 'வீரகேசரி' தனது

### கொழும்பு தமிழ் நாளிதழ் தலையங்கம்

ஆசிரிய தலையங்கத்தில் இப்படிக் கூறியுள்ளது.

"அணுகுமுறை மாற வேண்டும்" என்ற தலைப்பில் நேற்றைய வீரகேசரியில் வெளியான ஆசிரிய தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தேசிய முரண்பாடுகளையும் இனமுரண்பாடுகளையும் தணியச் செய்வதற்கான நடவடிக்கைகளை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சில இலக்குகளை முன்வைத்து மேற்கொண்டு வருகிறது

3ஆம் கட்டப் பேச்சுகளுக்கு சென்ற நிலையிலேயே அரசியல் தீர்வு பற்றிய நிலைப்பாடுகளை அரசாங்கம் துரிதமாக செயல்படுத்த முனைவதை அவதானிக்க முடிகிறது.

முதலாவது வாக்குறுதியின் படி தடை நீக்கப்பட்ட பொருள்கள் மக்களை சரியாகச் சென்றடையவில்லை

மின்சாரம், தொலைபேசி மீதான தடைநீக்கம் போன்றவை எல்லாம் வெறும் பேச்சளவில்தான் என்ற நிலை தொடர்கிறது என்ற எண்ணமே வடபகுதி மக்களிடம் எஞ்சியுள்ளது—

அரசு தனது நிலைப்பாட்டில் இருந்து தளராது இனப்பிரச்சினைக்கு தீர்வு யோசனைகளை பெப்ரவரி மாத இறுதிக்குள் தயாரிக்க முனைகிறது.

இதற்கான வழிவகைகளை துரிதப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி பணித்துள்ளார்.

இவை சமாதானப்பாதை தேக்க நிலையின் அடிப்படைக் காரணமான பரஸ்பர சந்தேகத்தை தொடர விடாதவகையில் எதற்கு முன்னுரிமை என்ற முரண்பாட்டை தவிர்த்து இநகட்டமாக—ஏற்கனவே இணங்கித்தொடர்ந்த சமாதானப் பேச்சை சமநிலையாக முன்னெடுத்துச் செல்வதே விவேகமானது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்—

இப்படி வீரகேசரி ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# செசின்ய பிரிவினைப் போர் 50 வருடங்களுக்கு தொடரும்

## டுடயேவ் எச்சரிக்கை

செசின்யாவின் கோரிக்கையை ரஷ்ய அரசு ஏற்க மறுக்குமிடத்து —

தமது பிரிவினைப் போர் 50 வருடங்களுக்காவது முன்னெடுத்துச் செல்லப்படும் என்று செசின்ய ஜனாதிபதி டுடயேவ் தெரிவித்துள்ளார்.

தமது பிரிவினைப்போராட்டம் ரஷ்யாவின் ஏனைய மாநிலங்களுக்கும் விரிவுபடும் என்றும் அவர் எச்சரித்தார்.

இதற்கிடையில் செசின்யத் தலைநகர் குரொஸ்னியை ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்கி வருகின்றன. (இ-3)

# முலாயம் சிங் அரசுக்கான ஆதரவை காங்கிரஸ் விலக்கிக் கொண்டது

## உத்தரப் பிரதேசத்தில் நெருக்கடி?

புதுடில்லி, ஜன. 31

உத்தர பிரதேசத்தில் முலாயம் சிங் அரசுக்கான ஆதரவை காங்கிரஸ் கட்சி விலக்கிக் கொண்டு விட்டது.

நேற்று முன்தினம் இரவு புதுடில்லியில் காங்கிரஸ் காரியக்கமிட்டி இது தொடர்பாக ஒருமனதான தீர்மானத்தை நிறைவேற்றியது.

கட்சியில் இருந்து திரு. அர்ஜுன் சிங் இடை நிறுத்தப்பட்டதையும் காரியக் கமிட்டி ஏற்றுக் கொண்டது.

உத்தர பிரதேசத்தில் 13 மாத காலமாக ஆட்சியில் இருந்து வரும் சமாஜ்வாதி கட்சி, பகுஜனசமாஜ் கட்சி கூட்டணி எல்லாத் துறைகளிலுமே தோல்வியடைந்துள்ளது என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு மேலும் சீர்குலைந்து விட்டன எனறும் —

குற்றச் செயல்களும் பெருகி விட்டன என்றும் —

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்றும் — காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டி [illegible]

குலாம் நபி ஆசாத் நீங்கலாக காங்கிரஸ் [illegible] அங்கத்தவர்கள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

குஜராத், மத்திய பிரதேசம் ஹரியானா, கோவா, நாகாலாந்து, புதுச்சேரி, மகாராஷ்ரா அஸ்ஸாம் ஆகியவற்றின் முதலமைச்சர்களும் கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

இதற்கிடையில் சமாஜ்வாதி கட்சி, பகுஜன சமாஜ் கட்சி அரசுக்கு ஆபத்து எதுவுமே இல்லையென்றும், இந்தக் கூட்டணி சபையில் தனது பெரும்பான்மை வலுவை நிரூபித்துக் காட்டக் கூடிய நிலையில் இருக்கிறது என்றும் [illegible] பொதுச் செயலாளர் [illegible] கூறியுள்ளார். (இ-5)

# கரண் போராளிகள் மீதான தாக்குதலை நிறுத்துக

## பர்மாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

கரண் போராளிகள் மீதான தாக்குதலை நிறுத்துமாறு அமெரிக்கா பர்மிய இராணுவ அரசிடம் கேட்டுள்ளது

கடந்த வெள்ளிக்கிழமை போராளிகளின் தலைமையகத்தை படையினர் கைப்பற்றியதிலிருந்து மோதல் நடைபெறுகின்றன.

இந்த மோதல்களில் பர்மிய படையினருக்கும் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தாய்லாந்து செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல்களில் மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் தாய்லாந்துக்குள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

தற்போது தாய்லாந்து எல்லையில் சுமார் ஒரு லட்சம் பர்மிய அகதிகள் தங்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

## தாதிகள் மீது நடவடிக்கை

அரச ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் தாதிகள் வேலை நேரத்தில் அசம்பாவித செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல வைத்தியசாலைகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுற்று நிருப இலக்கம் 1182-30/8/91 இன்படி நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார். (இ 3)

## ரூ. 50 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன 31

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ஒருவர் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு பயன்படும் 25 லீற்றர் கோடாவை வைத்திருந்தமைக்காக 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என யாழ் மாவட்ட நீதிமன்ற நீதியாளர் திரு. இசையமுதத்தினால் தீர்ப்பளிக்கப்பட்டது.

## தமிழ் இசைவிழா

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 37 ஆவது ஆண்டு தமிழ் இசைவிழா நாளை புதன் கிழமை முதல் 5 தினங்கள் தினமும் மாலை 5 மணி முதல் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜன்ஸ் குழுவினரின்
**இன்னிசை நிகழ்வு**

அளவெட்டி அருணோதயக் கல்லூரி வர்த்தக மன்ற வளர்ச்சிக்காக தைத்திருநாளன்று இடைநிறுத்தப்பட்ட

ராஜன்ஸ் இசைக் குழுவினரின்

★ **இன்னிசை கானம்** ★

எதிர்வரும் புதன்கிழமை [01-02-1995] மாலை 6 மணியளவில் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். பிரவேசம் இலவசம்.

வர்த்தக மாணவர் மன்றம்
அருணோதயக் கல்லூரி.

[7881]



உடுவில்
மகளிர் கல்லூரி
**பட்டப்படிப்புகள் பிரிவு**

**B.A. (Part-I), B.A. (Final)**
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

விரிவுரைகள்

**ஆரம்பம்: 01.02.95 பி.ப. 3 மணி**

★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

– நிர்வாகி –

[சி/466]


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை நித்தியானந்தவேல்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலிகிதர் சேவையாளரும், நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் கோவில் நிர்வாக சபைத் தலைவருமாகிய சின்னத்துரை நித்தியானந்தவேல் அவர்கள் நேற்று (30-01-95) காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை – அன்னஜானகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், கமலாம்பிகையின் அன்புக்கணவரும், அமிர்தவல்லி, சுந்தரவல்லி (கனடா), கிருபானந்தமூர்த்தி (மின் அத்தியட்சகர்), சரவணபவன் (லண்டன்), தண்டாயுதபாணி (யாழ். மருத்துவபீட மாணவர்), கணநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம், றங்கராஜன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், காயத்திரி, கஸ்தூரி ஆகியோரின் பேரனும், சதானந்தவேல், பரமேஸ்வரி, தாயுமானவர், மகாலட்சுமி, கணேசமூர்த்தி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஆ. சுந்தரலிங்கம்
(மருமகன்)

செம்பாடு,
வல்வெட்டித்துறை.
(34943)

### திருமதி யோகராஜா மகாலட்சுமி

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி யோகராஜா மகாலட்சுமி [30-01-95] அன்று காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி. நாகர் தம்பதிகளின் அன்பு மகளும், செல்லையா யோகராசாவின் அன்பு மனைவியும், ஞானசேகரம் (ஜேர்மனி), கணேசநாதன் [பிரான்ஸ்], கலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலட்சுமி (ஜேர்மனி), சாந்தகுமார் [பிரான்ஸ்], சிவாஜி (தொழில் நுட்பஉத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு, முல்லைதீவு), ஆகியோரின் அன்பு மாமியாரும, கார்த்திகா [ஜேர்மனி], சுலக்ஷன் [ஜேர்மனி], சுதர்ஷன் [ஜேர்மனி], சபேசினி [பிரான்ஸ்], ஜனனி, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
யோகராசா
[கணவன்]

நவாலி தெற்கு
[34945]

### திருமதி
### வாலம்பா சுவாமிநாதபிள்ளை

மானிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி வாலம்பா சுவாமிநாதபிள்ளை 30-1-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான மானிப்பாய் இராமநாதன்—உதயல் நாயகி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுவாமிநாதபிள்ளையின் (ஆசிரியர் சோதி வேம்படி பாடசாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமுதம், அன்னம், நாகம்மா, சிதம்பரநாதன் பரஞ்சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 31-1-95 காலை 11மணிக்கு நல்லடக்கத்துக்காக சண்டிலிப்பாய் சிவராஜாவின் இல்லத்தில் இருந்து கொட்டுப்பனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி அமுதவதி சிவராஜா
(றா.பி) மருமகள்

சண்டிலிப்பாய்
வடக்கு.
[7882]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31-01-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# யாழ். மக்களின் கஷ்டங்களை கரிசனையுடன் கேட்ட பாப்பரசர்

யாழ்ப்பாணம், ஜன. 31

இலங்கை வந்திருந்த பரிசுத்த பாப்பரசர் யாழ். மக்களின் இன்னல்கள் குறித்து யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தர நாயகத்திடம் விரிவாகக் கேட்டறிந்தார்.

இலங்கை வந்திருந்த சமயம் பாப்பரசர் கொட்டாஞ்சேனை சென். லூசியா தேவாலயத்தில் பொது அவையினரை சந்தித்தார். அவ்வேளையிலேயே யாழ். மக்களின் அவலங்கள், இன்னல்கள் ஆகியன குறித்து விரிவாகக் கேட்டறிந்தார்.

யாழ். ஆயரும், யாழ். மாவட்டத்தில் இருந்து சென்ற குருமார்களும், பொது அவையினரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

யாழ். குடாநாட்டுக்கான பாதையின்றி மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் —

பொருளாதாரத் தடை காரணமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் சீராகக் கிடைக்காமையால் அனுபவிக்கும் கஷ்டங்கள் — போன்ற விடயங்கள் பாப்பரசருக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்தவர்களும், மன்னார் பகுதியில் இருந்து வந்தவர்களும் தமது கஷ்ட நிலைகள் குறித்து பாப்பரசருக்கு எடுத்துக் கூறினார்கள்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை ஏற்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டிய அவசியம் குறித்தும் பாப்பரசருக்கு விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது.

பாப்பரசர் இவ் விடயங்களை மிகக் கரிசனையுடன் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ-3-4)

## காங்கேசன் தொழிற்சாலை திறக்கக் கோரிக்கை

### ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணத்தை விட்டு இந்திய அமைதிப்படை வெளியேறியதிலிருந்து மூடப்பட்டிருக்கும் லங்காசிமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கைத்தொழில் பொதுத் தொழிலாளர்சங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது,

சங்கத்தின் செயலாளர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்படி தொழிற்சாலையில் வேலை செய்த ஊழியர்கள் 600 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும்—

சமாதானத்திற்கும் நம்பிக்கைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ் வேளையில் இத்தொழிற்சாலையை திறக்கக் கூடிய ஒரு சூழ்நிலை தோன்றியுள்ளது என்றும்—

தொழிற்சாலையை மீளத் திறப்பது மூலம்இந்தப் பிரதேசங்களில்இயல்பு நிலையைஏற்படுத்துவதுடன் அரசின் மீது பொதுமக்கள் நம்பிக்கைவைக்கவும் ஏதுவாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் சாத்தியங்கள் குறித்து ஆராயகைத்தொழில் அபிவிருத்தி, புனர்வாழ்வு, வீடமைப்பு, மின்சக்தி எரிபொருள் ஆகிய அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட குழுவொன்றை அமைக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

மேலும் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் பெற்று வரும் மூன்றில் ஒரு பகுதி சம்பளத்தை 50சதவிகித சம்பளமாக உயர்த்தி, தொழிற்சாலை இயங்கத்தொடங்கும் வரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-14)

### குண்டு வீச்சு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் அந்த நினைவுச் சின்னத்தை பாப்பரசரிடம் வழங்கியதும் அவர் அதனை ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஐ-3-4]

### விருப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள தொகுதி மக்களுக்கும் இடையேயான நேரடித் தொடர்புகள் அற்றுப் போனதொரு நிலையும் காணப்படுகிறது -

உத்தேச அரசியலமைப்பு மாற்றத்தின் பிரகாரம், மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் முன்னைய தேர்தல் முறையின்படி நேரடியான தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். மிகுதி மூன்றில் ஒரு பகுதியினர் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்படி தெரிவு செய்யப்படுவார்கள்—

புதிய தேர்தல் முறை இரண்டு முறைகளின் சிறப்பான அம்சங்களை உள்ளடக்கிய ஒரு புதிய திட்டமாக இருக்கும். ஜேர்மனியின் அரசியலமைப்பில் காணப்படும் அம்சங்களை ஒத்ததாகவே இந்தத் திட்டம் இருக்கும்— என்று அமைச்சர் பீரிஸ் விளக்கினார். (அ-4)

### இரணவில...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதை அப்பகுதி மக்கள் தீவிரமாக எதிர்த்ததை அடுத்து வானொலி நிலைய அமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதன் பின்னர் வானொலி நிலையத்தை மீண்டும் அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுக்கும் அமெரிக்க அரசாங்கத்துக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டது.

பிரஸ்தாப நிலையத்தை நிறுவுவதற்கான புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது

இந்நிலையில் —

அமெரிக்க வானொலி நிலையம் அங்கு அமைக்கப்படுவதை இரணவில பகுதி மக்கள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர். (ஐ-6)

## தமிழக சிறுமி நீச்சலில் சாதனை

சென்னை, ஜன. 31

சென்னையைச் சேர்ந்த மதனி என்ற சிறுமி நீச்சலில் உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

குறைந்த வயதில் நீண்ட தூரத்தை, குறுகிய நேரத்தில் நீந்திக் கடந்த முதல் சிறுமி என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

இவரது பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சிறுமி மாலைதீவில் 32 கிலோமீற்றர் தூரத்தை 11 மணி 52 நிமிடங்களில் கடந்துள்ளார். (இ-5)

### பூநகரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துங்கா பூநகரி முகாம் விவகாரத்தை இழுத்தடிக்க முற்படக் கூடாது.

அண்மையில் யாழ், சென்று திரும்பிய லண்டன் ஹாலியம் நகர முன்னாள் மேயரும், லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட இந்திய பூர்வீக பிரஜைகளின் தேசிய அமைபின் தலைவருமான திரு சின்னமணி முன் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வைத்து தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது யாழ். குடாநாட்டு மக்கள் பூரண நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கையை அவர் தொடர்ந்தும் தக்க வைத்திருக்க வேண்டுமானால் இதய சுத்தியுடன் — விரைவாக அரசியல் துணிச்சலுடன்—செயற்படவேண்டும். யாழ்ப்பாண மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்

தமது அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடியாக விடிவு ஏற்பட வேண்டும் என்றே யாழ். மக்கள் இன்று எதிர்பார்க்கிறார்கள்.

— இவ்வாறு திரு. சின்னமணி அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார். [ஐ 4]

### 4 ஆம் கட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டுவதாகவும் —

உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதாகவும் — கூறப்படுகிறது.

இவை அனைத்தும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள்.

**கண்காணிப்புக் குழுக்கள்**

மோதல் தவிர்ப்பைக் கண்காணிக்க அமைக்கப்படவிருந்த குழுக்கள் இன்னமும் செயற்படாததே இந்தச்சம்பவங்கள் குறித்து உறுதிப்படுத்த முடியாமைக்கு ஒரு காரணம்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் தலைமையில் மோதல் தவிர்ப்பு மீறல்களை கண்காணிக்கும் ஆறு குழுக்கள் அமைக்கப்படவிருந்தன.

பின்னர் ஆறு குழுக்களையும் நான்கு குழுக்களாக குறைக்க இரு தரப்பினரும் இணங்கினார்.

கண்காணிப்புக் குழுக்களில் அங்கம் வகிப்பதற்காக வெளிநாட்டவர்கள் வந்தும் அந்தக் குழுக்கள் இன்னும் செயற்படவில்லை.

அதனால் மோதல் தவிர்ப்பு மீறல்களை இன்னமும் உறுதி செய்ய முடியாதுள்ளது.— என்று கூறப்பட்டது. (அ-3)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

O/L
EVENING CLASSES [4-00 TO 6-00]
SAT SUNDAY CLASSES [8-00 TO 2-00]
DAY CLASSES [8.00 TO 2-00]

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05-02-1995

விஞ்ஞானம்: திரு. J. R. சூரி
சமூகக்கல்வி: திரு. கோபி
ஆங்கிலம்: திரு. விஸ்வநாதன்
சமய[illegible]: திரு. [illegible]
கணிதம்: திரு. தயாளன்
தமிழ்: திரு. திருப்பதி
திரு. பிரதீபன்
வர்த்தகம்: திரு. கருணாகரன்

[சி4-60]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகம் அகற்றப்பட்டு வெளிநாட்டுக்கு விற்பனை

## பெங்களூரில் 3 டாக்டர்கள் கைது

பெங்களூரில் மனிதர்களின் சிறுநீரகங்களைத் திருடி வெளிநாடுகளில் விற்பனை செய்து வந்த மோசடிக் கும்பல் ஒன்றை காவல்துறையினர் கைது செய்துள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஈரோடு, மற்றும் சேலத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளர்கள் ஆவர்.

வேலை வாங்கித் தருவதாக இவர்களை பெங்களூருக்கு அழைத்துச் சென்று இரத்தம் எடுக்கும் சாட்டில் சிறுநீரகங்கள் அகற்றப்பட்டதாக காவல்துறையினர் தெரிவிக்கிறார்கள்.

பெங்களூரில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஆயிரம் சிறுநீரகங்கள் இப்படி மோசடியான முறையில் அகற்றப்பட்டிருப்பதாகவும் இதற்கு டாக்டர்களும் அவர்களின் ஏஜென்டுகளும் உடந்தையாக இருந்தனர் என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பெங்களூர் மருத்துவமனையின் சிறுநீரக வேலைத்துறைத் தலைவர் ஒருவரும் மூன்று டாக்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

# விமான பயணத்தின் போது பெண் குழந்தை பிரசவம்

விமானத்தில் பிறந்த பெண் சிசு ஒன்று தனது வாழ்நாள் முழுவதும்வருடம்ஒருமுறைஉலகில்தான்விரும்பியஎந்தஇடத்துக்கும் இலவசமாக விமானத்தில் பயணம் செய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

அண்மையில் பஹ்ரெய்னில் இருந்து கொழும்புக்கு வந்த "கல்ப் எயர்" விமானத்தில் பயணம் செய்த இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரே அந்தக் குழந்தையை விமானத்தினுள் பிரசவித்தார்.

"கல்ப் எயர்" நிறுவனம் அந்தக் குழந்தை வருடம் ஒரு முறை தான் விரும்பிய இடத்துக்கு இலவசமாக விமானத்தில் பறக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

மிகவும் இக்கட்டான அந்தப் பிரசவ நேரத்தில் சிறப்பாகக் கடமையாற்றிய விமான ஊழியர்கள் ஐந்து பேரைப் பாராட்டி விமான நிறுவனம் பரிசில்களை வழங்கியுள்ளது.


சிறுகதைத் தொகுதி
**வெளியீட்டிற்கான ஆக்கங்கள்**

மகளிர் அபிவிருத்தி நிலையம் வெளியிட இருக்கும் சிறுகதைத் தொகுதிக்கான தரமான ஆக்கங்களை பெண் எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. ஆக்கங்கள் மகளிர் அபிவிருத்தியை மையமாக கொண்டதாக இருத்தல் வேண்டும். கதைகள் தெரிவு செய்யப்படும் போது தரமானவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கதைகள் 15 பக்கங்களுள் அடங்குதல் விரும்பத்தக்கது.

அனுப்ப வேண்டிய இறுதித் திகதி **15-02-95**

தொடர்பு;
மகளிர் அபிவிருத்தி நிலையம்

07, சயந்தசிறி லேன்,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(34937)


வைத்திய கலாநிதி
அமரர் ஜே.பி.சி. பிலிப்ஸ்
அவர்களின்
## அஸ்திக் கிரியைகள்



மாசித்திங்கள் [01-02-1995] புதன்கிழமை அமரர் அவர்களது 'அஸ்தி' யாழ். மரியன்னையின் பேராலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு நிகழும் திருப்பலியின் பின் யாழ். மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அனைவரும் இவ்வழைப்பை அன்புடன் ஏற்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

திருமதி மொயிரா பிலிப்ஸ்,
(மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பிலிப்ஸ் நேர்ஷிங்ஹோம் ஊழியர்கள்.

கதீற்றல் வீதி
யாழ்ப்பாணம்.
[34928]

## மரண அறிவித்தல்

### கந்தையா பூரணம்

கைதடி, கோவிலாக்கண்டியைச் சேர்ந்த கந்தையா பூரணம் நேற்று காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், தருமராஜா [தர்மிகா பல்பொருள் வாணிபம், கைதடி], சிவராஜா [ஜேர்மன்], காலஞ்சென்ற தங்கராஜா, தங்கராஜினி (டென்மார்க்) ஆகியோரின் தாயாரும், சிவமலர், கிருஷ்ணவேணி, மகாலிங்கம் ஆகியோரின் மாமியாரும், சின்னப்பிள்ளை, சீதேவி, கந்தசாமி, இரத்தினம் [பிரான்ஸ்] ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
தருமராஜா
[மகன்]

கோயிலாக்கண்டி,
கைதடி.
[34946]